கண்காணிப்புப்பொறியாளர்,நீஅது., கீழ்காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர், அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – பொறி.சு.அன்பரசன், எம்.இ.,
கண்காணிப்புப்பொறியாளர். நீஆது.,

காவேரி வடிநிலக் கோட்டம் 26/7/21
செ.பொ.
தொ.நு
நே.மு.உ.
கோ.க.அ.
க.கா.
இளநிலை
மு.நி.வி
தொ.அ 26/7/21

பொறியாளர், பொ.ப.து., நீ.ஆ.து. என் 1432 நாள் 27/7/21 வடிநில கோட்டம், தஞ்சாவூர்

செ.மு.ஆணை எண்.990/2021/நி1/நாள்–26.07.2021.
பிலவ வருடம் ஆடி 10, திருவள்ளுவராண்டு–2052.

பொருள்– பணியமைப்பு – பொபது – த.நா.அ.ப தொகுதி – காலஞ்சென்ற அரசு ஊழியர் கோ.ஜெயக்குமார், தலைமைப்பணியாளரின் மகன் திரு.ஜெ.சசிக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குவது – தொடர்பாக.

பார்வை– 1) முதன்மைத்தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர். (பொது) பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(4)/25509/2012/ நாள்.09.11.2018
2) அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை.நாள்–26.02.2021
3) அரசு கடித எண்.12572/பி1/2020–4, நாள்–19.03.2021
4) செயற்பொறியாளர், நீஆது., காவிரி வடிநில கோட்டம், தஞ்சாவூர் கடித எண். கோ.03(885)/2021/ நி1/நாள்.05.05.2021

==0==

ஆணை–

இவ்வட்டக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தஞ்சாவூர், காவிரி வடிநில கோட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் காலஞ்சென்ற அரசு ஊழியர் கோ.ஜெயக்குமார் வாரிசுதாரரான அவரது மகன் திரு.ஜெ.சசிக்குமார் என்பவருக்கு பார்வை 1–இல் சென்னை, முதன்மைத்தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர், (பொது) பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 14.12.2018 முற்பகல் முதல் பணிமேற்கொண்டு பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(க்யூ1) துறை/ நாள்.26.02.2021 மற்றும் அரசு கடித எண்.12572 / பி1/2020-4/நாள்.19.03.2021-இல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கிணங்க அரசாணையின் பத்திகள் (5.1) மற்றும் (5.2)-ல், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்த விதிதளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு பணியினை வரன்முறைப்படுத்தி கொள்ளலாம் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாணையினை செயல்படுத்த சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தஞ்சாவூர், காவிரி வடிநில கோட்ட கடித எண். கோ.03(885)/2021/நி1/நாள்.05.05.2021-இன் வாயிலாக பெறப்பட்டுள்ள கருணையின் அடிப்படை பணிநியமன வரன்முறை தொடர்பான கருத்துருவினை பரிசீலனை செய்ததில், தனியர் பத்தாம் வகுப்பில் (எஸ்எஸ்எல்சி) ஏப்ரல் 1998 மற்றும் அக்டோபர் 1998-ல் நடைபெற்ற தேர்வுகளில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றுள்ளார் மற்றும் தனியரின் பிறந்த தேதி 17.06.1983 என சான்றுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, தனியரது பணியினை வரன்முறை செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 14.12.2018 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28(1)-இன்படி பார்வை 2-இல் கண்டுள்ள அரசாணையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் திரு.ஜெ.சசிகுமார், இளநிலை உதவியாளர் பணிநியமனத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 14.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஊதிய உயர்வு, ஊதிய நிலுவையிருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஒம்/-சு.அன்பரசன்,
கண்காணிப்புப்பொறியாளர், நீஆது.,
கீழ்க்காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர்.

பெறுநர்-
திரு.ஜெ.சசிக்குமார்,
இளநிலை உதவியாளர்,
காவிரி வடிநில கோட்டம், தஞ்சாவூர்.

(வழி) செயற்பொறியாளர், நீஆது., காவிரி வடிநில கோட்டம், தஞ்சாவூர்.

/உ.ந.ஆ.அ/

கண்காணிப்புப்பொறியாளர், நீஆது.,சார்பில்,
கீழ்க்காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர்.